egistered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 26 ஆம் நாள் துல்கஃதா 24 (8-4-64) புதன்கிழமை இதழ் 58

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# ஷேக் அப்துல்லா இன்று விடுதலை

## நேருவையும் அயூபையும் விரைவில் சந்திப்பார்

ஸ்ரீநகர், ஏப் 7

காஷ்மீரின் முன்னுள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா நாளை புதன்கிழமை விடுதலை செய்யப்படுவார் என்று காஷ்மீர் பிரதமர் திரு. சாதிக் இன்று அறிவித்தார். திரு. ஷேக் அப்துல்லாவுடன் சிறைவைக்கப்பட்டிருக்கும் ஏனையவர்களும் நாளை விடுதலை செய்யப்படுவார்கள். இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த சதிக்குற்றச்சாட்டு வாபஸ் பெறப்படுமென்று இன்று அறிவிக்கப்பட்டது.

திரு. ஷேக் அப்துல்லாவின் விடுதலை குறித்து பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ இன்று அபிப்பிராயம் தெரிவிக்கையில், திரு. ஷேக் அப்துல்லாவின் விடுதலை குறித்துத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், சிறையிலிருந்து விடுதலையானதும் திரு. ஷேக் அப்துல்லா, பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானைச் சந்திக்கலாமென்றும் கூறினுர்.

கடந்த பத்து வருடங்களாக சிறையிலிருக்கும் திரு. ஷேக் அப்துல்லா நாளை விடுதலையடைந்த பின்னர் இந்தியப் பிரதமர் நேருவை விரைவில் சந்திக்கலாம் எனத் தெரியவருகிறது.

இந்திய-பாகிஸ்தான் உறவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளைக் குறைத்து இரு நாடுகளிடையேயும் நல்லுறவுகளை உண்டு பண்ண தாம் முயற்சியெடுக்கப் போவதாகவும் இந்து-முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க தாம் முயற்சி மேற்கொள்ளப் போவதாகவும் திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

—

## கூப்பனுக்கு வேட்டி சேலை கிடையாது!

யாழ்ப்பாணம், புதன்

புதுவருடத்துக்கு குறைந்த விலையில் வேட்டி, சால்வை, சேலை கிடைக்காது. கூப்பனுக்கு நான்கு யார் துணி விற்கப்படும் கூட்டுறவுமொத்த விற்பனவு கடைகளுக்கும், பலநோக்கச்சங்க கடைகளுக்கும் சேலை, வேட்டி எதுவும் வரவில்லை. யாழ்ப்பாணப் பகுதிகளிலுள்ள கூ. மொ. வி. கடைகளுக்கும் பலநோக்கசங்க கடைகளுக்கும் இப்பொழுது இந்தியன் 'லோங் குளோத்' வந்திருக்கிறது. விதி குறைந்த இந்தத் துணியை உயரம் குறைந்தவர்களே வேட்டியாக அணிய முடியும். சில வாரங்களுக்கு முன் விற்கப்பட்ட 'ஜப்பிங்பிஷ்' என்ற சீத்தைத் துணி கூட இப்பொழுது விற்பனைக்கு இல்லை.

சேலை, வேட்டி கிடையாததால் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பலநோக்கச்சங்கக் கடைகளிலும் கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளிலும் முன்னர் போல் இப்பொழுது மக்கள் கூட்டத்தைக்காண முடிவதில்லை.

தனிப்பட்டவர்களின் ஜவுளிக் கடைகளில் சேலை வேட்டிகள் தாராளமாக உள்ளன. ஆனால் இவற்றின் விலைகள் முன்னரை விட இரண்டு மூன்று மடங்கு அதிகம். இப்பொழுது ஒரு வேட்டியின் ஆகக் குறைந்த விலை 8 ரூபா 75 சதம் என்றும் குறைந்த விலையில் வாங்கக்கூடிய சேலை லங்கா சேலை தானென்றும் அதன் விலை 14 ரூபாய் என்றும் ஒரு வர்த்தகர் தெரிவிக்கிறுர்.

—

வடபகுதி அசைஸ்

## "காடைத்தனமாக திரிவது அமைதிக்கு நல்லதல்ல"

— நீதியரசர்

### கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 6 வருடச் சிறை

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி கொலை முயற்சி வழக்கில் வடபகுதி அசைஸ் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ. ஸி. எதிரிக்கு ஆறுவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

கரவெட்டி மேற்கில் கல்லோடையென்ற பகுதியில் வசிக்கும் கறுவல் மாணிக்கம் என்பவரை அவ்வூரைச்சேர்ந்த கந்தன் என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாக இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் சார்பில் திரு ஏ. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் திரு. எம். எஸ். சுந்தரலிங்கம் திரு. ஆர். கோபாலரத்தினத்தின் உதவியுடன் ஆஜரானுர். முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. ஏ. டி. சில்வா வழக்கை நடத்தினுர்.

வழக்குவிசாரணையின் முடிவில் எதிரி கைமோசக்கொலை செய்தாரென்ற குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டுவிட்டதாகஜூரிகள் ஏகமனதாகத் தெரிவித்தனர்,

நீதியரசர் எதிரிக்கு ஆறு வருடக் கடூழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் "யாழ்ப்பாண மக்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும். காடைத்தனமாக கத்தியுடனும் கிரிஸ்ஸுடனும் உலாவித் திரிவது உகந்ததல்ல" என்று குறிப்பிட்டார்.

—

### ஒத்திவைப்பு

கொழும்பு, செவ்.

இன்று நடைபெறவிருந்த லங்கா சமசமாஜக் கட்சியின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கு ஆயத்தம் செய்யும் கூட்டமாக இது இருக்கும் எனக் கூறப்பட்டது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பது பற்றி காரசாரமான விவாதம் நடைபெறும் என அரசியல் அவதானிகள் எதிர்பார்த்திருந்தனர்.

—

கொழும்பு, செவ்வாய்

பூட்டான் பிரதமரின் மறைவு குறித்து பிரதமர் சிறிமா அனுதாபச் செய்தியொன்று பூடான் அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளார்.

### இறக்குமதியில் தாமதம்

கொழும்பு, செவ்.

இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களுக்குரிய இறக்குமதி கோட்டாக்களில் சுமார் 35 சதவிகித கோட்டாக்கள் இன்னும் வந்து சேரவில்லையென்றும் தங்களது சரக்குகள் இங்கு வந்து சேர்வதற்கு கப்பல் வசதிகளில்லாமலிருக்கின்றன என்றும் இறக்குமதியாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். இதன் விளைவாக கட்டிடத் தளபாடங்களுடன் பல அத்தியாவசியமான பொருள்களும் இங்கு வரவில்லையென்று அறிவிக்கப்படுகிறது.

இதுசம்பந்தமாக இறக்குமதியாளர்கள் பலர் இறக்குமதி கட்டுப்பாட்டு அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர். இதற்கிடையில் இந்த வருடத்தின் மிகுதி ஆறு வருடங்களுக்குரிய இறக்குமதி கோட்டாக்கள் சம்பந்தமாக இறக்குமதி தட்டுப்பாடுகள் பகுதி விரிவான முறையில் ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

## சல்வினியா செடிகளை வடபகுதிக்கு அனுப்பகோரிக்கை

### தெற்கில் அழித்தொழிக்கப்படுவது வடபகுதி மண்ணுக்கு வளமூட்டுகிறதாம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையின் தென் பகுதியில் வேண்டப்படாததாகக் கருதப்படும் சல்வினியா நீர்ச் செடிக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் கிராக்கி இருந்து வருகிறது. இந்த சல்வினியாச் செடி யாழ்ப்பாண மண்ணுக்கு வளமூட்டும் நல்ல பசளையாக இருப்பதாக பரிசோதனைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சல்வினியா நீர்ச்செடி யாழ்ப்பாணப்பகுதி வயல்களுக்கு வளம் கொடுப்பதாகக்கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட விவசாய கமிட்டி, தெற்கிலுள்ள சல்வினியா செடிகளை சேகரித்து வடபகுதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. தெற்கில் பல இடங்களிலுமுள்ள குளங்களிலும் ஏரிகளிலும் இந்தச் செடி நிறைந்து காணப்படுகிறது. இது தண்ணீரின் சுத்தத்தன்மையை பாதிப்பதால் இதை குளங்களிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் பிடுங்கி எறிவது வழக்கம். அழித்தொழிக்கப்படும் சல்வினிய செடிகளைச் சேகரித்துக் காயவைத்து, பெட்டிகளில் அடைத்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்குமாறுவிவசாயக் கமிட்டி கேட்டுள்ளது. இதை இங்கு விவசாயிகளுக்கு விநியோகிப்பதால் அதிக விளைச்சல் ஏற்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

## அரசாங்க கட்டடத்தில் காரியாலயங்கள் இடம்பெறும்

### நிதிமந்திரியின் திட்டம்

கொழும்பு, செவ்வாய்,

கொழும்பிலும் வெளியிடங்களிலுமுள்ள அரசாங்கக் காரியாலயங்களை அரசாங்கத்துக்குச் சொந்தமான கட்டடங்களில் இடம்பெற வழிவகைகள் மேற்கொள்ளுமாறு நிதியமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின திறைசேரியைக் கேட்டுள்ளார்.

திறைசேரி அதிகாரிகளைக் கொண்ட ஒரு மகாநாட்டிலேயே நிதிமந்திரி மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டார்.

விரைவில் இதனை செயல்

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

எச்சமயமும் எதுவும் நடக்கலாமென்பதை நான் உணர்வேன். ஆனால் எது நடந்தாலும் அது கடவுளின் சித்தப்படியே அவரது மகத்தான திட்டத்தின் ஓர் அம்சமாக நன்மைக்காகவே நடக்கிறதென்பதையும் நானறிவேன்.

— ஜோன் ஹோகன்

ஈழநாடு

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna Telegram. EELA NADU Jaffna Phone 389

சுபமங்கள சோபகிருது ஆண்டு பங்குனி மீ 26 உ. (8-4-64)

## துணிப் பஞ்சம்

இந்து-பௌத்த புதுவருடத்துக்கு ஜவுளித்தட்டுப்பாடு இருக்கமாட்டாதென்றும் இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் ஜவுளிகள் வந்துவிடுமென்றும் மந்திரிகள் தெரிவித்தனர். மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். புதுவருடம் பிறக்க இன்னும் ஒருசில நாட்களேயுள்ளன. ஆனால் ஜவுளியைத்தான் காணோம். நாலு யார் சீத்தைக்காகவும், துணிக்காகவும் கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளின் முன்னும், சங்கக் கடைகளின் முன்னும் மக்கள் 'கியூ'வில் நிற்பது வட இலங்கையில் குறைந்துவிட்டது. ஏன்? சினிமாவுக்கு கியூவில் நிற்கும் மக்களுக்குத் துணிக்கும் கியூவில் நின்று பொழுதைத் தமாஷாகக் கழிக்கவே இந்த ஏற்பாடென்று ஒரு பொறுப்புள்ள மந்திரி ஒரு கூட்டத்தில் கூறினாராம். வட இலங்கை மக்களுக்கு இந்த தமாஷா பிடிக்கவில்லையென்றும் மந்திரி சொல்லலாம்!

வட இலங்கை மக்களுக்குத் தேவையான ஜவுளிகள் கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளிலோ, சங்கக்கடைகளிலோ கிடைக்காததுதான் கியூவில் மக்கள் நிற்காததற்குக் காரணமென்பதை மந்திரி அறிந்திருக்கமாட்டார். பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை இருப்பினும் பழக்கவழக்கம், உடை ஆகியவைகளில் வேற்றுமை உண்டு. நாலு யார் சீத்தையைக் கம்பாயமாக உடுத்துக் கொள்வது சிங்கள மாதர்களின் பழக்கம். ஆனால் இந்துப் பெண்கள், நாகரிக முன்னேற்றத்தினால் முழத்துணியை குறைத்துக்கொண்டாலும் ஆறு யாருக்குக் குறைந்த சேலையை அணியமாட்டார்கள். இதேபோல் ஆண்களுக்கும் வேட்டி சால்வையும் அவசியம். இந்துக்களுக்கும் பொதுவாகத் தமிழருக்குத் தேவையான சேலையும் வேட்டியும் வட இலங்கையிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளிலோ, சங்கக்கடைகளிலோ கிடைப்பதாக இல்லை. தமிழ் எம். பி.க்கள் சிலர் இதுபற்றி மந்திரிகளுக்குத் தந்திமூலம் தெரிவித்திருந்தும் இதுவரை இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரே மொழியென்பதுபோல் ஒரேவித உடை அணிவதுதான் தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சரியான வழியென அரசாங்கம் கருதுகிறதோவெனத் தெரியவில்லை. தங்களுக்குத் தேவையான துணி கிடைக்காமல் தமிழர் மிக ஏமாற்றமடைகின்றனர். நாட்டின் ஒற்றுமைக்கும் நல்லதல்ல'

இதே சமயம் தோட்டப்பகுதியில் வாழும் மக்களுக்கும் ஜவுளி கிடைக்க இன்னும் வழிபிறக்கவில்லை. ஏற்கனவே உரிமைகள் 'மறுக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடைகளையும் மறுப்பது மனித நீதியாகாது.

ஜவுளி இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதித்த அரசாங்கம் ஜவுளித் தட்டுப்பாட்டுக்குத் தனிப்பட்ட வர்த்தகர்கள்தான் காரணம் என்று இனியும் பழியைப் பிறர் தலையில் போட முடியாது. மக்களும் நம்பமாட்டார்கள். இனியும் காலம் கடத்தாது சகல மக்களுக்கும் அவரவர்களுக்குரிய ஜவுளிகள் நியாயமான விலையில் கிடைக்க உரிய வழிவகைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் ஏற்கெனவே பல வழிகளிலும் மனம் கொதிக்கும் ஒரு பகுதி மக்களின் அதிருப்தியையும் வெறுப்பையும் மேலும் வளர்ப்பதாக இருக்கும்.

## முத்தமிழ் மணி ஸ்ரீ மணிபாகவதர்

கொழும்பு, புதன்

முத்தமிழ்மணி ஸ்ரீ மணிபாகவதர் சிங்கப்பூரிலிருந்து நேற்று விமானமார்க்கமாகக் கொழும்பு திரும்பி, நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சேருவாரென்று தெரிகிறது. அவர் ஒருவருடகாலம் மலாயாவிலே கதாகாலட்சேப திருப்பணியை வெற்றிகரமாகச் செய்து, பலரது பாராட்டுகளையும் நன்றியையும் பெற்றுள்ளார். சிங்கப்பூரிலும் மலாயாவிலும் அவருக்கு விசேஷமாக பல பிரியாவிடைகள் அளிக்கப்பட்டன.

# களத்துமேடு

மழை குறைவான எங்கள் பிரதேசங்களில் குறைந்த செலவில் கூடிய வருவாயைத் தரக்கூடிய இன்னொரு சிறுதானியம் நிலக்கடலை. இந்தியாவில் இதை வேர்க்கடலை என்று சொல்லுவார்கள். தரைக்குக் கீழே வேர்களில் முளைப்பதால் அப்பெயர் வந்தது. இன்று இந்தியாவிலிருந்து பல லட்ச ரூபாய் பெறுமதியான நிலக்கடலை இங்கு தருவிக்கப்படுகிறது.

அடுத்தவர் என்ன பயிர் செய்கிறாரோ அதையே நாமும் பின்பற்றும் வழக்கம் எம்மிடத்திலுமுண்டு. புதியதாக ஒரு பயிரைச் செய்து பார்ப்போம் என்று சிந்திப்பதில்லை. ஒருவர் எள்ளு விதைத்தால் மற்றவரும் எள்ளு; ஒருவர் சணல் போட்டால் அடுத்தவரும் சணல். கீரைக்கடைக்குஎதிர்க் கடை என்பதுபோல ஊக்கமுள்ள கமக்காரர் சிலர் இங்கேயும் நிலக்கடலை உற்பத்திச் செய்ய முன்வந்தால் மற்றவர்களும் அதைப் பின்பற்றி ஏராளமான பணம் வெளியூர்களுக்குப் போவதைத் தடுக்கலாம்.

நிலக்கடலையில் இரண்டுவிதமுண்டு. ஒன்று கொடிக்கடலை, மற்றது குத்துக்கடலை; முந்தியது கொடியாகவும் பிந்தியது செடியாகவும் வளரும். குத்துக்கடலை மூன்றுமாதங்களில் சாகுபடி கொடுக்கும் ஆதலால் அதுவே விரும்பத்தக்கது.

மாசி மாதத்தில் நெல் அறுவடை முடிந்தபின்பு காணியை உழுது பண்படுத்தி, தண்ணீர் பாய்ச்சக்கூடிய முறையில் பாத்திகட்டி பருப்புகளை விதைத்தால் எட்டுநாட்களில் முளை கிளம்பும். ஆனால் இந்த எட்டு நாட்களும் கண்ணுக்குள் எண்ணை விட்டுக்கொண்டு காகம் குருவிகளைக் கலைக்க வேண்டும்.

நிலக்கடலைச் செய்கையால் இரண்டுவித நன்மையுண்டு என்று கமக்காரர்கள் தெரிவிக்கிறார்கள். ஒன்று நிலக்கடலைக்கு அதிகம் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. வாரத்துக்கு ஒரு தடவை குளிர்ச்சியாக இறைத்துவிட்டால் போதுமானதாகும். இரண்டாவது நிலக்கடலை விளைந்தநிலம் செழுமையடைகிறது. பொதுவாக எந்த நிலமானாலும் ஒரே பயிரை விதைத்துக் கொண்டிருந்தால் புஷ்டி குறைந்துவிடுகிறது. மாற்றுப்பயிர் செய்கை நிலத்துக்குக் கூடிய போஷாக்குக் கொடுக்கும் என்பது எல்லாக் கமக்காரர்களுக்கும் தெரிந்த விஷயம்.

கடலைக் கொட்டைக் காரி இல்லாத திருவிழாவில்லை. கடலைக் கொட்டைக்கு காசு கேளாத குழந்தையுமில்லை. கோயில் வீதிகள் எங்கும் மின்மினிகளைப் போல லாந்தர்களைக் கொளுத்தி வைத்துக்கொண்டு "கடலை விற்கிற அம்மா" இல்லாவிட்டால் திருவிழா பூரணத்துவம் அடையாது. இதனால் நிலக்கடலையின் உபயோகம் திருவிழாக் காலங்களில் கொறிப்பதோடு நின்று விட்டதென்று நினைக்கப்படாது; நிலக்கடலை எண்ணைக்கும் பிண்ணுக்குக்கும் நல்ல கிராக்கி உண்டு. ஆகையினால் இதுவும் காசுப்பயிர் வர்க்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கச்சான் கடலை அல்லது நிலக்கடலையின் கட்டுப்பாட்டு விலை 49 ரூபாய் 25 சதமென்றும், ஆனால் வெளிமார்க்கட்டில் சில சமயம் ஓர் அந்தர் 120 ரூபாய் வரை விற்கப்படுகிறதென்றும் சங்குவேலி பயிர்ச் செய்கைக் குழுவின் தலைவர் திரு. த. செல்லத்தம்பி தெரிவிக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் பொதுவாக ஒரு பரப்புக்கு இரண்டு புசல் நெல்தான் விளையும் கட்டுப்பாட்டு விலைக்கு இதை அரசாங்கத்திடம் ஒப்படைத்தால் 24 ரூபாய் கிடைக்கும். ஆனால் நிலக்கடலையோ ஒரு பரப்புக்கு ஒரு அந்தர் விளைந்தால் அதன் கட்டுப்பாட்டு விலையோ இரட்டிப்பாகிறது.

சங்குவேலி கமக்காரர் தங்கள் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் 2000 ரூபாய்க்கு விதைகடலை தருமாறு அரசாங்கத்திடம் விண்ணப்பித்திருப்பதாகவும் திரு. செல்லத்தம்பி கூறுகிறார். கூட்டுறவு இலாகாவும் கமத் தொழில் இலாகாவும் கிராமப் பயிற் செய்கைக் குழுக்களும் ஒத்துழைத்து ஒரு முன்மாதிரி காட்டி விட்டால் வேறு கிராமங்களும் சங்கு வேலியைப் பின்பற்றுமென்று நிச்சயமாகக் கூறலாம்.

— கலப்பை

# பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன்

### பலர் சாட்சியம்

கொழும்பு, செவ்.

"சோமராமாவை தனக்கு முதலில் தெரியும் என்று கூறிய திருமதி விமலாவிஜயவர்த்தன, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அடையாளம் கண்டு பிடிக்கும்படி அவரைக் கேட்டபோது திருமதி விமலாவிஜயவர்த்தன மறுத்த சம்பவம் தனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது" என்று பிரதமர் பண்டாரநாயக்காவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்த திரு. டி. பி. அமரசிங்கா தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் நேற்றுக் காலை மீண்டும் கூடியபொழுது திரு. டி. பி. அமரசிங்கா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தான் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த திரு. எம். டபிள்யு. எப். அபயக்கோன் நேற்றுக்காலை சாட்சியமளிக்கையில்; பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை சுட்டவரை அடையாளம் காட்டுமாறு தாம் கேட்டபொழுது திருமதி விமலா விஜயவர்த்தன பிடிவாதமாக மறுத்துவிட்டார் என்றும் இப்படி பிடிவாதமாக மறுத்ததற்குரிய காரணம் தமக்குத் தெரியவில்லையென்றும் கூறினார்.

மற்றுமொரு சாட்சியான கழனி கிராமக் கமிட்டித் தலைவர் திரு. டி. எஸ். ஜி. கழனிதிலகா விசாரணைக் கமிஷன் முன் மீண்டும் அனுமதிக்கப்பட்டார்.

தலைவர்: கொலைச் சம்பவம் நிகழ்ந்த பின்னர் நீர் கழனிக் கோவிலுக்குப் போனீர்?

சாட்சி: ஆம்.

தலைவர்: புத்தரகித்தாவைப் பார்ப்பதற்கு நீர் செல்லவில்லை என்று கூறுகின்றீர். அவருடன் பேசுவதற்கு உம்மை எது தடுத்தது.

சாட்சி: அவர் என்னை சந்தேகித்தார். நான் அவரைச் சந்தேகித்தேன்.

தலைவர்: உம்மிடம் புத்தரகித்தா எதையோ கதைத்ததிலிருந்து அவர் உம்மை சந்தேகிக்கின்றார் என்று நீர் கருதினீர்?

சாட்சி: ஆம். நேற்றையவிசாரணை இறுதியில், திருமதி விமலா விஜயவர்த்தனவும் எதிரான சாட்சியங்கள் முடிவடைந்து விட்டதாக சொலிஸிட்டர் ஜெனரல் கூறினார். இதற்கிடையில் திருமதி விமலாவிஜயவர்த்தனவுக்கு சார்பான சாட்சியங்கள் இருந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ள தயாராக விருப்பதாக கமிஷன் தலைவர் கூறினார்.

### பலர் சாட்சியம்

கார்ச் சாரதி கே. ஏ. பேபிசிங்கோ, திருமதி விஜயலத்தா குறுவித்தை, திரு. டி. ஜெயசூரியா, ஜயந்தா வித்தியாலய உரிமையாளர் தர்மதாசா ஜயசிங்கா, பிலெக்சிங்கோ, பேட்டி கொஸ்வத்தை ஆகியோரும் நேற்று சாட்சியமளித்தனர்.

## இலங்கை திருப்புகிறார்

வட்டுக்கோட்டை, செவ்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கத்தின் மகனும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி பழைய மாணவரும், இலங்கை அரச விமானப்படையைச் சேர்ந்தவருமான திரு. குலரத்தினம் பாகிஸ்தானில் பயிற்சியை முடித்துக்கொண்டு இம்மாதம் 12ந் திகதி இலங்கை திரும்புகிறார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய் நீயே பெரியார்கட்கெல்லாம் பெரியாய் நீயே,
உண்ணவரு நஞ்ச முண்டாய் நீயே, ஊழிமுதல்வனாய் நின்றாய் நீயே,
கண்ணுயுலகெலாங் காத்தாய் நீயே கழற்சேவடியென்மேல் வைத்தாய் நீயே,
திண்ணார் மழுவாட்படையாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ.

— திருநாவுக்கரச

## ஐயாறன் எழுதுவது

கோடிக்கரையிலிருந்து வல்வெட்டித்துறைக்கு கடல்மூலம் நீந்திவர முயன்ற மூவரும் தோல்வியடைந்துவிட்டனராம். இதைக் கேட்டதும் எனக்கு ஒருவிதத்தில் ஆறுதல்.

ஏன் தெரியுமா? அவர்கள் மூவரும் இங்கு வெற்றிகரமாக வந்து சேருவதாக வைத்துக் கொள்வோம். பின்னர் அவர்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து லட்சக்கணக்கானவர்கள் கடல்மார்க்கமாக நீந்தி வந்து, கள்ளத்தனமாகக் குடியேறிவிடுவரென்று இங்கு சில தலைவர்களும் பத்திரிகைகளும் கூச்சலிடக்கூடும். ஆகவே அம் மூன்று வீரர்களும் மூன்றல்லது நான்குமைல் தூரத்துக்கு மேல் நீந்திவர முடியாமல் போனதும் நல்லதுதானே.

* * *

தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு நீந்திவர முயன்ற மூவரில் இருவர் ஆண், மற்றவர் பெண். ஆண்கள் இருவரும் மூன்றுமைல் தூரம் நீந்தியபின் சீதோஷ்ணநிலை காரணமாக மேலே நீந்தமுடியாமல் படகில் ஏறிவிட்டார்களாம். பெண்மணி அஸ்லின் டயஸ் மட்டும் அதிகதூரம் நீந்தி வந்து, பிறகு இம்முயற்சியைக் கைவிட்டதாக அச்செய்தி கூறுகிறது. ஆணுக்குப் பெண் சளைத்தவளா? சக்தியின் சுயரூபங்களாகிய அவர்களை பலவீனர்களென்று யார் அலட்சியம் செய்ய முடியும்? சபாஷ் அஸ்லின்!

* * *

எனக்கு மற்றொரு விதத்தில் ஆறுதல். ஈழத்திலிருந்து முன்னர் நீந்திய இருவரும் வெற்றிகரமாகப் போய்ச் சேர்ந்துள்ளனர். ஆகவே சிதம்பர தரிசனத்துக்குச் செல்ல நமது காருண்ய அரசாங்கம் அனுமதி மறுத்தால் உடன் கடல்மூலம் நீந்தி வெற்றிகரமாகச் சென்றுவிடலாமல்லவா?

கோடிக்கரையிலிருந்து அம் மூவரும் இங்குநீந்தி வந்திருந்தால் அவர்களை கள்ளத்தோணிகள், கள்ளக்குடியேற்றக்காரர்கள் என்று கூறி கைவிலங்கிட்டு கொழும்புக்கு அழைத்துச் சென்றாலும் செல்லலாம். யார் தடுக்க முடியும்? அதை நினைத்தால் அவர்கள் மூவரும் இம்முயற்சியில் தோற்றது நல்லதுதான். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே.

ஆனால் காலம் மாறலாம்! அப்போது இவ்வித முயற்சியை வெற்றிகரமாகச் சாதிக்க முடியலாமென்பதே பலர் நம்பிக்கையும்.

* * *

உலகத்திலேயே மிகவும் ஆபத்தான வேலை என்னதெரியுமா? ஒரு நாட்டின் பிரதமர் பதவிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இலங்கைப் பிரதமர் மனைவியுடன் அமெரிக்காவுக்குச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்கையில் திடீரென ஒரு துப்பாக்கிக்குண்டுக்குப் பலியானார். இந்தியாவின் வடகிழக்கேயுள்ள பூட்டான் ராஜ்யத்தின் பிரதமர் தம்மனைவியுடன் ஓர் அறையில் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவன் ஜன்னல் வழியாக அவரை சுட்டுக் கொலை செய்து, தப்பியும்விட்டானாம்!

பிரதமர் பதவி மிகவும் ஆபத்தும் கஷ்டமும் நிறைந்ததெனினும் அந்தப் பதவிக்குத்தான் எவ்வளவு போட்டா போட்டிகள்.

* * *

பல வாரங்களுக்குப் பிறகு நேற்று மத்தியானம் யாழ்ப்பாணத்தில் இடிமுழக்கத்துடன் நல்ல மழை. இந்தக் கோடை மழை இங்கு வெப்பத்தைச் சற்றே அடக்கியுள்ளதால், இது பெரிதும் வரவேற்கப்படுகிறது.

(4-ம் கலம் பார்க்க)

# "யுத்தத்தை ரஷ்யா விரும்பவில்லை!
## நாடுகளின் உயர்வு, தாழ்வு பொருளாதாரத்தில்தான் தங்கியிருக்கிறது"
### புடாபெஸ்டில் குருஷ்சேவ்

புடாபெஸ்ட், ஏப்ரல் 7

"சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் சோவியத் யூனியன், யுத்தமில்லாமல் வாழவே விரும்புகின்றது. யாரை யார் மிஞ்சுவதென்பது போரின் முறையில் தங்கியிருக்கவில்லை. பொருளாதாரத்தின் முன்னேற்றத்தில்தான் இதுதங்கியிருக்கிறது" என்று இரசாயன தொழிற்சாலையொன்றில் பிரதமர் குருஷ்சேவ் நேற்று உரைநிகழ்த்துகையில் கூறினார்.

"மக்களிடையே யுத்த ஆசை இப்பொழுது இல்லை. ஏனைய நாடுகளுடன் சமாதானமாக வாழவே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் திரு. குருஷ்சேவ் கூறினார்.

கம்யூனிஸ்ட் சீனா பற்றி அவர் குறிப்பிடுகையில், அமைதியும் போரும் என்ற சீனாவின் கொள்கைகள் ஆபத்து நிறைந்தனவாகவிருக்கின்றன என்றும் சீனாவின் போக்கு தனிப்போக்காகவிருப்பதுடன் தன்னையும் நாசமாக்கிக்கொள்ள முனைகிறது என்றும் கூறினார்.

அணு ஆயுதப்போர் ஒன்று ஏற்பட்டால் உலக சமுதாயத்தின் அரைவாசிப் பேர்தான் உயிரிழப்பார்கள் என்ற சீனாவின் கருத்து வேடிக்கையானதும் விபரீதம் நிறைந்ததுமாகும் என்றும் பிரதமர் குருஷ்சேவ் குறிப்பிட்டார்.

சமாதானமாக வாழ விரும்பும் ரஷ்யா, அயல்நாடுகளுடன் உள்நாட்டுத் தகராறுகளில் தலையிட விரும்பவில்லையென்றும் குருஷ்சேவ் கூறினார்.

## "ஆசிய-ஆபிரிக்க இயக்கத்தை பிளவுபடுத்த முயற்சி"
### சீனாவின் நடத்தை குறித்து ரஷ்ய அதிகாரி கண்டனம்

மாஸ்கோ, ஏப். 7

கம்யூனிஸ்ட் சீனா கடைப்பிடித்துவரும் கொள்கைகள் உலக நாடுகளுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தலாம் என்று அல்ஜியர்ஸ் மகாநாட்டின் சோவியத் தூது கோஷ்டித் தலைவர் திரு. கபூராத் தெரிவித்துள்ளார்.

அல்ஜியர்ஸில் நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் கலந்துகொண்டு மாஸ்கோ திரும்பிய திரு. கபூராத்தை பத்திரிகை நிருபர்கள் நேற்று பேட்டிகண்டனர்.

திரு. கபூராத் தொடர்ந்து பேசுகையில்; ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை இயக்கத்தை பிளவுபடுத்தவே சீனா விரும்புகிறதென்றும், அல்ஜியர்ஸில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் சீனாவின் நட்பாசை நிறைவேறவில்லை என்றும் கூறினார்.

"அல்ஜியர்ஸில் நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் சீனர்கள் கலந்துகொண்ட விதம் மிகவும் கண்டிக்கக்கூடியதாகும். இந்த மகாநாட்டில் சீனர்கள் நடத்திய காலித்தனத்தை முன்பு எந்த மகாநாட்டிலும் நாங்கள் காணவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இதுவன்றோ ஏமாற்றம்!

வேலூர், ஏப். 7

வேலூரில் மாவட்ட வருமான வரி அதிகாரி பங்களாவில் அண்மையில் 'தடல்புடல்' விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல உயர் அதிகாரிகளுக்கு அழைப்புகளும் அனுப்பப்பட்டிருந்தன.

அழைப்பாளர்கள் எல்லோரும், மிகவும் அழகான ஆடைகள் அணிந்துகொண்டு விருந்துக்கு வந்திருந்தனர். விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், அங்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று 'எல்லோருக்கும் ஒரு கிளாஸ்' குளிர்ந்த நீர் கொடுத்து அனுப்பினார்கள். என்ன ஏமாற்றம்! குறிப்பிட்ட தினம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யென்பது அவர்களுக்கு பின்னர்தான் தெரியவந்தது.

## பல்கலைக்கழக செனட் தேர்தல்

சென்னை, ஏப். 7

இம்மாதம் 27-ம் திகதி செனட் சபைக்கு நடைபெற விருக்கும் தேர்தலை ஆட்சேபித்து திரு. டி. எஸ். ராமச்சந்திரன் தாக்கல் செய்த 'ரிட்' மனுவொன்றை சென்னை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

வாக்காளர் பட்டியல் சரியாகவில்லை என்றும், இறந்துபோனவர்களின் பெயர்கள் கூட இப்பட்டியலில் காணப்படுகிறதென்றும் மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

## பிரிட்டன் மீது இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஏப். 7

கடந்த மாதம் ஏமன் எல்லையிலுள்ள ஹரீப் கோட்டை மீது பிரிட்டன் தாக்கியது குறித்து இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் ஏமன் எல்லையிலுள்ள ஹரீப்கோட்டையை பிரிட்டிஷ் விமானங்கள் தாக்கின. விமானங்களின் கடுமையான குண்டுவீச்சுகளினால் கோட்டை தவிடுபொடியானதுடன் 25 பேர் மாண்டனர்.

ஏமன் கோட்டைமீது பிரிட்டன் மேற்கொண்ட நடவடிக்கை ஆசிய-ஆபிரிக்க மக்களிடையே பெரும் திகிலை உண்டுபண்ணியுள்ளதென்றும் இச்செயலைப் இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறதென்றும் தனது குறிப்பில் தெரிவித்துள்ளது.

## சுழல்காற்றில் பறந்த கார்கள்!

டெக்ஸாஸ், ஏப். 7

திடீரென்று இங்கு ஏற்பட்ட சுழல்காற்றின் விளைவாக ஏழு பேர் மாண்டனர் என்றும் 300 பேர் வீடிழந்ததுடன் நூறு லட்சம் ரூபா பெறுமதியுள்ள சொத்துக்களுக்கு நஷ்டமேற்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுழல்காற்று பெரு வீதிகளூடே புகுந்தடித்தபொழுது, 240 வீடுகள் சேதமடைந்தன. 69 பேர் காயமடைந்தனர். பல மோட்டார் கார்கள் வான வீதியில் பறந்து சென்றன! இதனுடன் வீடுகளிலிருந்த கதிரைகளும், மற்றும் பொருள்களும் பல மைல் தூரங்களுக்கு பறந்துசென்றன. ஷெப்பார்ட் விமான நிலயத்தில் விமானக் கூடாரம் இடிந்து விழுந்ததினால் பல விமானிகள் படுகாயமடைந்தனர்!

## அல்ஜீரிய அதிகாரி கொலை

அல்ஜியர்ஸ், ஏப். 7

அல்ஜீரியா அரசாங்க அதிகாரியொருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராபா செராடி என்ற இவர், தமது கிராமத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தபொழுதுதான் இக்கோர சம்பவம் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கியூபா வாபஸ்

வாஷிங்டன், ஏப். 7

சர்வதேச செலாவணி நிதிஸ்தாபனத்திலிருந்து கியூபா வாபஸாகி விட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## சந்தேக நபர் கைது

திருப்பதி, ஏப். 7

பம்பாய் 'ஏர் இந்தியா சாலணி கொலைவழக்கு' சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த பாலையா தேவர் இங்கு கைது செய்யப்பட்டு பம்பாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

## யுத்த நிறுத்தம்

நிக்கோஸியா, ஏப். 7

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றுவந்த கடும் சண்டைக்குப் பின்னர் சைப்பிரஸின் வடமேற்குப் பகுதியில் யுத்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மறுவாழ்வு

புதுடில்லி, ஏப். 7

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவந்த 90 லட்சம் மக்களுக்கு மறுவாழ்வளிக்கப்பட்டிருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

## ராஜினமா

எர்ணுகுளம் ஏப். 7

கேரள பிரதேச காங்கிரஸ் தலைவர் திரு. கே. பி. மாதவன் ராஜினமா செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

# "ஷேக் அப்துல்லா ஒரு தேசியவாதி"
### தாராசிங் கருத்து

ஜம்மு, ஏப். 7

ஷேக் அப்துல்லாவைச் சிறையில் சந்தித்துப் பேச்சுகள் நடத்திய அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங், அப்துல்லா மீது தாம் அதிக நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் ஒரு தேசியவாதியென்றும் கூறினர்.

இந்திய-பாகிஸ்தான் உறவில் அபிவிருத்தியை ஏற்படுத்த ஷேக் அப்துல்லா முக்கிய பங்கு வகிக்கமுடியுமென்றும் திரு. தாராசிங் கூறினர்.

ஷேக் அப்துல்லாவுடன் திரு. தாராசிங் இரண்டு மணி நேரம் பேச்சுகள் நடத்தினர்.

**பக்ஷி மகிழ்ச்சி**

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்யவேண்டுமென்ற முடிவு, சிறிது தாமதிக்கப்பட்ட, மிக வரவேற்கத்தக்க நடவடிக்கையென்று முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு. பக்ஷி குலாம் முகம்மது தெரிவித்துள்ளார்.

திரு. பக்ஷி குலாம்முகம்மது திரு. லால்பகதூர்சாஸ்திரியை அண்மையில் சந்தித்தார். பிரதமர் நேருவையும் அவர் சந்தித்தாரெனத் தெரியவருகின்றது.

## ஷேக் அப்துல்லா விடுதலை
### சில எம். பீ.க்கள் கவலை

புதுடில்லி, ஏப். 7

இந்திய பார்லிமெண்ட் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. பி. வாஜ்பேயி, யு. எம். திரிவேதி, ராமச்சந்திரடாடே, திரு. பால்ராஜ் மோடக் ஆகியோர், மத்திய அரசாங்க மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியை சந்தித்து திரு. ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்படுவது குறித்த கவலை தெரிவித்தனர்.

காஷ்மீருக்கு விசேஷ அந்தஸ்து அளிக்கும் அரசியல் சட்ட 370 வது ஷரத்தை ரத்துச்செய்து அந்த ராஜ்யத்தை பூரணமாக இந்தியாவுடன் இணைக்கவேண்டுமென்றும் இதன்மூலமே காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கமுடியுமென்றும் இவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

## "ஏழைகளுக்கு வைத்திய வசதி"

உடுப்பிட்டி, செவ்

"தொற்று நோய்களாலும் பல பயங்கர வியாதிகளாலும் பீடிக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் நல்ல டாக்டர்களிடம் காட்டி வைத்தியம் செய்வதற்குப் போதிய பணமின்மையால் கிருமிநாசினிகளை அருந்தி உயிரை இழக்கிறார்கள். அரசாங்க வைத்தியசாலைகளிலும் கூட நல்ல விலையுயர்ந்த மருந்துகள் ஏழைகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்த நிலை மாறவேண்டுமானால் எமது அரசாங்கம் சகல வைத்தியர்களையும் பாரபட்சமற்றமுறையில் கண்ணியமான வைத்தியம் செய்யும்படி செய்ய வேண்டும்."

நெல்லியடி இளைஞர் விவசாயக் கழகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த கரவெட்டி வடக்கு கிராமசேவையாளர் திரு. ஆ. தாமோதரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

'நமது நாடும் விவசாயமும்' என்பது பற்றி குண்டசாலை மாணவன் க. தர்லிங்கமும், கோழி வளர்ப்பு பற்றி திரு. இ. என். சின்னத்துரையும் சொற்பொழிவாற்றினர்.

## இ. போ. சபைக்கு உழைக்கும் டைரக்டர்

கொழும்பு, செவ்

இலங்கைப் போக்குவரத்து சபையைச் சேர்ந்த இரண்டு டைரக்டர்கள் உழைக்கும் டைரக்டர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று போக்குவரத்து அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு நிதிமந்திரி அங்கீகாரம்வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

உழைக்கும் டைரக்டர்களாக திரு ஏ.ஜி.பெர்ணண்டோ திரு. எம். எஸ். ஹிலிப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. இவர்கள் வேலைபார்க்கும் தினமொன்றுக்கு ரூ. 50 வீதம் வழங்கப்படுமென்றும் ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் இவர்களுக்கு பணம் வழங்கப்படமாட்டாதெனவும் தெரியவருகிறது.

இ. போ. சபையின் நலன்களைக் கவனிக்க சபைத்தலைவருக்கு போதிய நேரமில்லாததால் அவருக்கு இ. போ. ச. டைரக்டர்கள் சிலர் உதவியளிக்கவேண்டுமென்று இ. போ. ச. டைரக்டர்கள் சபை கருதியதைத் தொடர்ந்து இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

## வவனியா தமிழ் ஆசிரியர் சங்கம்

வவனியா, செவ்.

"மாணவர்களின் குணமறிந்து, மனமறிந்து, செயலறிந்து, ஆற்றல் திறனறிந்து சூழலுக்கும், பரம்பரைக்கும் ஒத்த கல்வியைப் புகட்டுபவனே நல்லாசிரியன் எனப்படுவான். பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைத்தால் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி மேல்நிலையடையும்" என்று வவனியா வித்தியாதரிசி திரு வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற வவனியா வட்டாரத் தமிழ் ஆசிரியர்சங்கப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வவனியா மன்னார் மாவட்ட வித்தியாதிகாரி திரு. எஸ். ஞானசேகரம் கூறினர்.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு வே. சண்முகநாதன், உபதலைவர் திரு. சி. கந்தையா, காரியதரிசி திரு. ரி. கே. வில்வராசா, உபகாரியதரிசி திரு ச. குமரேசையா, தனதிகாரி திரு. அன்ரனி உபதனதிகாரி திருமதி யோகீம்.

## புனிதசின்னங்களுடன் மந்திரி பயணம்

கொழும்பு, திங்கள்

கல்வி கலாசார அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல தலைமையில் 7 பேர் கொண்ட தூது கோஷ்டி இலங்கையிலிருந்து பௌத்த சின்னங்களுடன் இன்று காலை ஜப்பானுக்கு விமானம் மூலம் பயணமானது.

பௌத்த சின்னங்கள் ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்படு முன்னர் நடைபெற்ற வைபவத்தில் பிரதமர் கலந்துகொண்டார்.

கொழும்பு, திங்கள்

அமெரிக்க தகவல் சேவைப் பகுதியினரும், விஞ்ஞான சேவைப்பகுதியினரும் கூட்டாக விஞ்ஞான சலனப் பட அரங்கை கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களில் இம்மாதம் 27-ம் திகதி முதல் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

திரைப்பட அரங்கின் பின் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட கருத்தரங்கும் நடைபெறும்.

# சிங்களம் தெரியாமல் அரசாங்கத்தில் வேலையா?

## பத்திரிகைக்கமிஷன் தலைவர் கேள்வி

கொழும்பு, செவ்வாய்

திரு. கே. டி. டி. சில்வாவை தலைவராகவும் திருவாளர்கள் டபிள்யு. ஈ. அபயக்கூன், எஸ். டபிள்யு. வல்பிட்ட ஆகியோரை அங்கத்தவர்களாகவும் கொண்ட பத்திரிகைக் கமிஷன் நேற்றுக் காலை மீண்டும் கூடியபொழுது கூட்டுறவு இலாகா சலனப் படப் பகுதியைச் சேர்ந்த திரு. ஜயந்தா வாகீஸ்வரர் சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கமிஷனுக்கு ஏற்கனவே தாம் ஒருமகஜர் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிவித்தார். பத்திரிகைகள் கண்டிக்கும்பொழுது அவைகளுக்குப் பதிலளிக்கும் உரிமையில்லாத அரசாங்க ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு பத்திரிகைக் கவுன்சில் ஒன்று நிறுவப்பட வேண்டுமென திரு. வாகீஸ்வரா கூறினர்.

1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி வெளிவந்த 'தவஸ' பத்திரிகையில் 'கூட்டுறவுவேலை' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் தம்மைப்பற்றியும், பிரசாரப்பகுதி உத்தியோகத்தர்பற்றியும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தனவென்று தெரிவித்தார்.

அந்தக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள்பற்றி மந்திரியோ இலாகா தலைவரோ தம்மிடம் விளக்கம் கேட்கவில்லையென்றும் வாகீஸ்வரா கூறினர்.

'ஒப்சேவர்', 'டைம்ஸ்' ஆகிய பத்திரிகைகள் தனது வேலைகளைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றனவென்றும் 1958-ம் ஆண்டில் நேருவின் இலங்கை விஜயத்தை தாம் படமாக்கியதை ஞாயிறு 'ஒப்ஸர்வர்' வெகுவாகப் பாராட்டியதென்றும் சொன்னர்.

தலைவர்: அதன் பின் பல விஷயங்கள் நடந்திருக்கலாம்.

வாகீஸ்வரா: நான் ஒரு படம் கூடத் தயாரிக்கவில்லையென்பதுதான் குற்றச்சாட்டு.

தலைவர்: அந்தக் கட்டுரையில் அப்படி கூறப்படவில்லையே! உமக்கு சிங்களம் தெரியுமா?

வாகீ: ஓரளவு தெரியும்.

தலைவர்: சிங்களம் தெரியாமல் அரசாங்க சேவையில் ஒருவர் எப்படியிருக்க முடியுமென எனக்குத் தெரியவில்லை.

வாகீஸ்வரா மேலும் சாட்சியமளிக்கையில் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையாகையால் திரு. வர்ணசிங்கா விசாரணை எதையும் கோரவில்லை என்றார்.

தலைவர்: இந்தக் கட்டுரைக்குப் பின்னரும் விளக்கம் கோரவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறதே? குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென உமக்கு எப்படித் தெரியும்? பிரபலமான ஒரு எழுத்தாளரால் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

வாகீஸ்வரா மேலும் சாட்சியமளிக்கையில் இக்கட்டுரை பொய்யானதென்றும் இவ்வித செயலைத் தடுக்க பத்திரிகைக் கவுன்சில் அவசியமென்றும் தெரிவித்தார்.


**ரீகல் (யாழ்ப்பாணம்)**

**REGAL — JAFFNA**

**NOW SHOWING**

Daily at 4-45, 7-00 & 9-45 p. m

Morning Shows

Sats. & Suns. at 10-30 a. m.

○ Ricardo Montalban

○ Vincent Price

in

**THE BLACK PIRATE**

(Totalscope — Eastman colour)



**வெற்றிகரமான 2வது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)

விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

கல்யாணி (காவலப்பிட்டி)



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜா தேவி

எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி

மற்றும் பலர் நடித்த

**பெரிய இடத்துப் பெண்**


## காரியதரிசியை திருப்பியனுப்ப முடிவு

எருக்கலம்பிட்டி, செவ்

இரத்தினபுரியைச் சேர்ந்த பணில்பத்து கிராமசபையில் கடமையாற்றிய திரு. எம். வி. ஏ. பெர்ணண்டோவை எருக்கலம்பிட்டி கிராமசபைக்கு காரியதரிசியாக உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை அனுப்பியுள்ளது.

காரியதரிசி ஒருவருக்கு சம்பளம் கொடுக்கக்கூடிய நிலையில் இக்கிராமசபை இல்லாதிருப்பதால், தற்போது இச்சபைக்கு காரியதரிசி ஒருவர் தேவையில்லையெனவும் ஆகவே இதுபற்றி வவுனியா உள்ளூராட்சி உதவி அதிபருக்குத் தெரிவித்து காரியதரிசியைத் திருப்பி அனுப்புமாறும் இம் மாதம் 2ந் திகதி நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடி சனசமூகநிலையத்தின் 16-வது ஆண்டுவிழாவும் வருடாந்த விளையாட்டுப்போட்டியும் சித்திரை வருடப்பிறப்பன்று நடைபெறவிருக்கின்றன. பலகிராமிய விளையாட்டுகள் மிகுந்த இவ்விழாவில் பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. வி. எஸ். ஆனந்தனின் கண்ணுடி மென்று தண்ணீர் குடித்தல், ஆள்மேல் லொறி ஏற்றுதல், நெஞ்சில் கல்லுடைத்தல் முதலிய தீரச்செயல்களும் நடைபெறவிருக்கின்றன.

## சுகாதார பகுதியில் மாற்றங்கள்

கொழும்பு, செவ்.

சுகாதாரப் பகுதியின் தலைமைக் காரியாலயத்தில் சில மாறுதல்களைச் செய்வதென்று மந்திரி தீர்மானித்திருந்ததைத் தொடர்ந்து சுகாதாரப் பகுதியில் சில உத்தியோகஸ்தர்களின் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. புதிய நியமனங்கள் விபரம் வருமாது:-

பிரயாணிகள் சுகாதாரப் பகுதி உதவி டைரக்டரும் சர்வதேச சுகாதார உதவி டைரக்டருமாக டாக்டர் பி. ஏ. டி. பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். உதவித் திட்ட டைரக்டர்: டாக்டர் டி. ஏ. ஜயசிங்கா இலங்கை சுகாதார சபையின் காரியதரிசி: திரு. டி. பி. டி. சமரசேகரா இவர்கள் தவிர வேறு சில நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன.

## வெளிநோயாளர் அவதி

ஊர்காவற்றுறை, செவ்

தீவுப்பகுதி மக்களுக்குப் பொதுவான பெரிய ஆஸ்பத்திரியான ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் இடவசதியில்லாமல் கஷ்டமடைகின்றனர்.

ஊர்காவற்றுறைப் பட்டின சபை இதுபற்றி அரசினருக்குப் புகார்செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இரண்டு சிறிய அறைகளைக் கொண்ட இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளருக்குரிய மலசலகூடம் அமைக்கப்படாமையால் நோயாளர் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

## சுகாதார பரிசோதகர் சங்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை சுகாதார பரிசோதகர் சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் கிறிஸ்தவ இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபொழுது பின் வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. அருளம்பலம், உபதலைவர்: திரு. ஏ. எல். செல்லத்துரை, செயலாளர்: திரு. க. இராசசிங்கம், பொருளாளர்: திரு. என். வைத்திலிங்கம்.

செயற்குழு அங்கத்தவர்கள்: திரு. சி. செபரத்தினம், திரு. ஈ. அருளையா, திரு. என். அருணசலம், திரு. கே. இரத்தினம், திரு. கே. கந்தையா.

தாய்ச்சங்கத்தின் கிளைப் பிரதிநிதி: திரு. கே. அருளம்பலம், பரிசோதகர்: திரு. எஸ். ஆறுமுகசாமி.

## வவுனியாவில் விளையாட்டுப் போட்டி

வவுனியா, செவ்வாய்

வவுனியா ஐக்கிய விளையாட்டுக் கழகத்தாரால் வருடாவருடம் புதுவருட தினத்தன்று நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் இவ்வருடமும் நடைபெறவிருக்கிறது. 30 மைல் மரதன் சைக்கிள் போட்டி, 5 மைல் மாணவர் சைக்கிள் போட்டி, 2 மைல் மாணவிகள் சைக்கிள் போட்டி, கயிறு இழுத்தல் மற்றும் 24 நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

30 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றிபெறுபவருக்கு முதலாவது பரிசாக 'றலி' சைக்கிள் வழங்கப்படவிருக்கிறது. மேற்படி போட்டியில் பங்குபற்றுவோர் வவுனியா மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விளையாட்டுப் போட்டியை வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையா ஆரம்பித்துவைப்பார்.

## ஆயுர்வேதவைத்தியர் நியமனம்

எருக்கலம்பிட்டி, செவ்.

எருக்கலம்பிட்டி கிராமசபையின் இலவச ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றிய சித்தாயுர்வேத வைத்தியர் திரு. என். சண்முகநாதன் புலோப்பளை கிராமசபையின் இலவச சித்தாயுர்வேத வைத்தியசாலைக்கும், பலாங்கொடையைச் சேர்ந்த திரு. எஸ். வில்லியம் சிங்கோ (ஆயுர்வேத வைத்தியர்) எருக்கலம்பிட்டி இலவச ஆயுர்வேதவைத்தியசாலைக்கும் உள்ளூராட்சி சேவை அதிகாரசபையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புகார் செய்யவில்லை

நாவாந்துறை, செவ்வாய்

நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம், பெற்றோர்-ஆசிரிய சங்கத்தைக் கூட்டும்படி தலைமையாசிரியருடன் தொடர்புகொண்டது உண்மையென்றும் ஆனல் சனசமூக நிலையத்தின் புகார் என்ற தலைப்பில் வெளிவந்த செய்திக்கும் சனசமூக நிலையத்திற்கும் தொடர்பில்லையென்றும் அதன் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

## வதிரி கழகம் வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

கொன்னுவத்தை விக்ரோறியா விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இமையாணன் 'சி' பிரிவுக்குமிடையே விக்ரோறியா விளையாட்டுத் திடலில் நடைபெற்ற போட்டியில் வதிரி பொமேர்ஸ் கழகம் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் திரு. என். அரியரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

**புள்ளிவிபரம்**

பொமேர்ஸ்: 15, 13, 15,

இமையாணன் 'சி' பிரிவு, 6, 15, 11.


**பிரீடம் மார்க் கற்பூரம்**




**கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம். என்றே கேட்டு வாங்குங்கள். இது ஓர் சிறந்த தயாரிப்பு**

தயாரிப்பாளர்கள்,

பிரீ லங்கா இண்டஸ்ட்ரீஸ்.

மினுவாங்கொட.

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 8-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — "உருவகக் கதைகள்" — எம். ஏ. ரஹ்மான், 7-30 ஏ. வேலாயுதபிள்ளை — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-15 கோயம்புத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் — வயலின், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 செய்தி அரங்கம், 7-45 என் மகள் — நாடகம், 8-00 திரைப்படஇசை, 8-45 இரல் இசை, 9-20 பொன்னெளிர் பாரதம் — இசைநிகழ்ச்சி, 9-50 இசைமாலை, 10-00 கோயம்புத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் — வயலின்.

—

## தமிழ்—சிங்கள புதுவருடம்

### விரிவான முறையில் கொண்டாட ஏற்பாடு

கொழும்பு, செவ்

இம்மாதம் 13 ம் திகதிவரும் தமிழ்-சிங்கள புதுவருடத்தை, சகல அரசாங்க இலாகாக்களும் அமைச்சுகளும் விரிவான முறையில் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புதுவருடதினத்தன்று நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலைவிழா கமிட்டி, நாட்டின்சகலமந்திரிகளுக்கும் ராஜியத் தலைவர்களுக்கும் முக்கிய மதத் தலைவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டு ஸ்தானிக உத்தியோகஸ்தர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றது.

புதுவருட தினத்தன்று கொழும்பிலும் முக்கிய மாகாணங்களிலும் முழுநாள் மத வைபவங்களை நடத்துவதென்றும் ஏப்ரல் மாதம் 20 ம் திகதி காலிமுகத்திடலில் விளையாட்டு விழாவொன்றை நடத்துவதென்றும் தேசிய கலைவிழாக் கமிட்டி தீர்மானித்துள்ளது.

## பதவி உயர்வுக்கு சிங்களதேர்ச்சி அவசியம்

### சகல அரசாங்க பத்திரங்களும் சிங்களத்திலே வழங்கப்படும்

கொழும்பு, செவ்.

விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்களைத் தவிர்ந்தஏனைய அரசாங்க ஊழியர்கள் எல்லோரும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் குறைந்தது முதலாவது 'கிறேட்'டிலாவது சித்தியடையவேண்டுமெனக் கோரப்படுவார்கள். சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையாத அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வித பதவியுயர்வும் அளிக்கப்படமாட்டாதெனத் தெரியவருகின்றது.

நேற்றுக் கூடிய மந்திரிசபையின் உபகமிட்டி, சாரதி லைசென்சுகளும், வருமானவரி லைசென்சுகளும் உட்பட, சகல அரசாங்கப் பத்திரங்களும் சிங்கள மொழியிலேயே வழங்கப்படவேண்டுமென்று முடிவு செய்துள்ளது.

அரசாங்க ஊழியர்கள் தங்களது பதவி உயர்வுகளுக்கு சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் கட்டாயம் சித்தியடைய வேண்டுமென்றும் இவ்வுபகமிட்டி தீர்மானித்துள்ளது.

அரசாங்க பத்திரங்கள் சிங்களத்தில வழங்கப்பட்ட பொழுதிலும், பொதுமக்கள் தாங்கள் விரும்பும் மொழியில் அரசாங்க பகுதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாமென்றும் இவ் உபகமிட்டி தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற கூட்டத்திற்கு நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தலைமை வகித்தார். நீதி மந்திரி திரு. ஜி. வி. டி. ஏ. டி' சில்வா, திறைசேரிக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா சமரக்கொடி, கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஜே. முபரேரா, கல்வி டைரக்டர் திரு. ஈ. எச். டி. அல்விஸ், அரச கரும மொழி கமிஷனர் டாக்டர் என். டி. எஸ். விஜயசேகரா ஆகியோருடன் நிதி அமைச்சு, திறைசேரி உயர் அதிகாரிகளும் சமூகமளித்தனர்.

## நெஞ்சில் காயம் இருவர் கைது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த சூசை செல்வன் இராசரத்தினம் என்பவர் நெஞ்சில் பலத்த காயத்துடன் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுசம்பந்தமாக திட்டியைச் சேர்ந்த யோவான் ஜோசப், சின்னவன் இராசு ஆகியோர் கைது செய்யப்பட்டு 14 ந் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

சிங்களத்தில்தேர்ச்சிபெருத

## அரசாங்க ஊழியர் பட்டியல் தயாராகிறது

கொழும்பு, செவ்.

சிங்களப் பரீட்சையில் சித்தியடையாத சகல அரசாங்க ஊழியர்களினதும் பெயர்களைக் கொண்ட ஒரு பட்டியலைத் தயாரிப்பதில் திறைசேரி இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமென்று அரசாங்கம் விடுத்த உத்தரவுக்குப் பணியாமல் சிங்கள அறிவு பெற மறுத்த ஏராளமான அரசாங்க ஊழியர்களைக் கண்டுபிடித்துத் தொடர்ந்து மேற்கூறிய நடவடிக்கையை எடுக்க திறைசேரி முன்வந்துள்ளது.

வருடாந்த சம்பள உயர்ச்சி தாமதப்படுத்தப்பட்ட சகல ஊழியர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியலை அனுப்பி வைக்குமாறு அரசாங்கபகுதித் தலைவர்களையும் அரசாங்க உதவி பெறும் கார்ப்பரேஷன்களின் தலைவர்களையும் திறைசேரி கேட்டுள்ளது.

## சுவீப் பரிசுகள்

கொழும்பு, செவ்வாய்

நான்காவது தேசிய ஆஸ்பத்திரி சுவீப்பின் முதற் பரிசான ரூ. 50,000 தலங்கம வடக்கைச் சேர்ந்த 75 வயதுள்ள கார்லிஸ் பெரேராவுக்குக் கிடைத்துள்ளது. இரண்டாவது பரிசுத் தொகையான ரூ. 16,000 ஹபரடுவையைச் சேர்ந்த திரு. எஸ், பி. எவ். செனிவர்த்னவுக்குக் கிடைத்துள்ளது. மாவனல்லையைச் சேர்ந்த திரு. டி. பி. சுந்தரசேகரா மூன்றுவது பரிசுத்தொகையான 7,750 ரூபாயைப் பெற்ளுர்.

—

## கிராமசபை அஞ்சலி

நெடுந்தீவு, செவ்வாய்

நெடுந்தீவு கிராமசபைக் கூட்டம் தலைவர் திரு. க. சா. குமாரசாமி தலைமையில் நடைபெற்றபோது காலம் சென்ற பெரியார்கள் டாக்டர் சுப்பிரமணியம் (பி. எஸ்.), யோக சுவாமிகள், சாம். ஏ. சபாபதி அவர்களின் மறைவுக்கு 2 நிமிட மௌனம் அனுஷ்டித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

—

## பிரிட்டிஷ் பொலிஸார் கைது

பெர்லின், ஏப். 7

கிழக்கு ஜெர்மன் பொலிஸார், மூன்று பிரிட்டிஷ் இராணுவ பொலிஸ வீரர்களைக் கைதுசெய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்கள் சம்பளத்திட்டம்

## அரசாங்கத்தின் யோசனை நிராகரிக்கப் பட்டது

கொழும்பு, செவ்

அரசாங்கத்தினல் உத்தேசிக்கப்பட்ட புதிய சம்பளத் திட்டத்தை வைத்திய நிபுணர்கள் சங்கமும், அரசாங்க வைத்திய உத்தியோகத்தர்கள் சங்கமும் நிராகரித்துவிட்டது.

டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் தொழிலைடத்துவதை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக இச்சம்பளத்திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பித்திருந்தது.

அரசாங்கத்தின் யோசனையை நிராகரித்து இவ்விரு சங்கங்களும், அரசாங்கம் சமர்ப்பித்திருந்த சம்பளத் திட்டத்துக்குப் பதிலாக சவறு ஒரு சம்பளத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளன.

அரசாங்கத்தினல் உத்தேசிக்கப்பட்ட சம்பளத் திட்டத்தின்படி, தற்போதைய பென்ஷனிலும் பார்க்க வைத்திய நிபுணர்களுக்கு 160 ரூபா மட்டுமே மேலதிகமாகக் கிடைக்குமென்று இரு சங்கங்களும் கருதுகின்றன. இதுசம்பந்தமாக இரு சங்கங்களும் சுகாதார மந்திரியிடம் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## கோண்டாவில் சிசுக் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியாகிய கதிரன் செல்லனின் மகன் சரசுவதியை எதிரியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தார்.

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன் செல்லன் என்பவர், அவரின் மகள் சரசுவதியின் குழந்தையைக் கொலை செய்ததாகவும் குழந்தையின் பிறப்பை மறைத்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் திரு டி. கணேசலிங்கம் திரு. விசுவநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர். கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப். இன்ஸ்பெக்டர் ராஜநாயகம் வழக்கை நடத்தினர்.

எதிரியின் மகள் சரசுவதி (வயது 16) வழக்கறிஞரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கை பின்வருமாறு தெரிவித்தார்:

எனது தகப்பனுரான எதிரி காலை 3 மணிக்கு முனிசிபா லிட்டியில் வேலைசெய்யச் சென்றுவிடுவார். நண்பகல் சாப்பிடவந்து உடன் திரும்புவார். பின்னர் இரவு 8 மணி

(6-ம் பக்கம் பார்க்க)

இலங்கை எங்குமுள்ள வியாபாரிகளிடமிருந்தும்

கொலிபிறி ஓடிகொலன்

உடன் பெற்றுக்கொள்ளவும்

— முக்கிய அறிவிப்பு —

கலப்பில்லாத நல்ல பொருளைப் பெறுவதற்கு மூடியிலுள்ள சிவத்த சீல் உடையாமல் இருக்கின்றதா என்பதைக் கவனிக்கவும்.

சிறந்த ஜெர்மனி ஓடிகொலனையே பாவியுங்கள், கொலிபிறி என்றே கேளுங்கள்.

விற்பனையாளர்:-

ஏ. வி. ஆர். ஏ. அன் கோ.

19, செட்டியார் தெரு, கொழும்பு

தொலைபேசி: 7211 அன் 7212





## செல்லம்ஸ்

புகைப்படத் தாபனத்தில் இப்பொழுது திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதனல் ஸ்டுடியோவில் படங்கள் பிடிக்கும் வேலை மாத்திரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. மற்றும் பிற இடங்களுக்குச் சென்று படம்பிடிக்கும் (out door) வேலைகள், டெவலப்பிங், பிரிண்டிங், முதலிய வேலைகள், செய்வித்துக் கொள்ளலாம். புதுவருடதினத்திலிருந்து மீண்டும் சகல வேலைகளும் ஆரம்பமகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். 221

### WANTED

Wanted services Librarian. Females preferred. State amount of security payable. Apply Gnaneswaran, 1st Floor, Kumaraswamy buildings, (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 211

### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences ApplyGnaneswaran, 1st Floor, Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212

## வரி விளம்பரம்

### யாழ்ப்பாண இந்துக்கல்லூரி திருக்கேதீச்சர யாத்திரை

வருகிற சித்திரைப் பூர்வ பக்ஷத்தில் நடைபெறும் அலங்கார உற்சவங்களில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் திருவிழா குரோதி வருஷம் சித்திரை மாதம் 8-ந் திகதி (20-4-64) திங்கட்கிழமை நிகழும். யாழ்ப்பாணத்திலிருந்து அத்திருவிழாவுக்கெனப் புறப்படும் திருக்கூட்டத்தில் சேர விரும்பும் பழைய மாணவர்கள் தயவுசெய்து 15-4-64க்கு முன் பழைய மாணவர் சங்கச் செயலாருடன் தொடர்பு கொள்க. போக விரும்பும் பழையமாணவர் ஒவ்வொருவரும் ரூபா 7-00 செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்ருேம். செயலாளர், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம். 215

### விற்பனைக்கு

EN 874 மொறிஸ் மைனர் சின்ன வான் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் பார்வையிடலாம்.

திராவிட ஐக்கிய பண்டகசாலை, சுன்னுகம். 220

### அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவிலுள்ள 32-ம் இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விலாசம்: க. திருநாவுக்கரசு, 42/4, நீராவியடி, யாழ்ப்பாணம். 224

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கருகில் ஸ்ரான்லி றோட்டில் சகல வசதிகளும்கொண்ட வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். விலாசம்: கனகரத்தினம், தேர்தல் கந்தோர், திருகோணமலை. 218

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1947

### IMPORTANT ANNOUNCEMENT SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

இந்து—முஸ்லிம்

# வகுப்பு ஒற்றுமையை தோற்றுவிக்க மகாநாடு

## பாரத - பாக் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்

புதுடில்லி, ஏப். 7

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஏற்படும் இனக் கலவரங்களைத் தடுத்து இந்து-முஸ்லிம் வகுப்பு ஒற்றுமையை வளர்க்கும் பொருட்டு இரு நாட்டு உள்துறை அமைச்சர்களும் இன்று புதுடில்லியில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்கள்.

இந்திய வெளிவிவகார காரியாலயத்தில் ஆரம்பமான இக் கூட்டத்தில் இந்தியா சார்பில், உள்துறை மந்திரி திரு. நந்தாவுடன் அஸாம், மேற்கு வங்காள முதன் மந்திரிகளும் பாகிஸ்தானிலிருக்கும் இந்திய ஹைகமிஷனரும் கலந்து கொண்டனர். பாகிஸ்தான் கோஷ்டியில் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லா கானுடன் இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனரும், கிழக்குப் பாகிஸ்தான் நிதி மந்திரியும் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பமாகுமுன்னர், பாகிஸ்தான் கோஷ்டியினர், ராஜ்காட்டுக்குச் சென்று மகாத்மா காந்தியின் சமாதியில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர் இன்றைய முதலாவது சுற்றுப் பேச்சு ஆரம்பமானது. இன்று காலை இரு தரப்பினரும் இரண்டு மணித்தியாலம் 15 நிமிடங்கள் வரை பேச்சுக்கள் நடத்தினார்கள். இந்திய கோஷ்டித் தலைவரும் பாகிஸ்தான் கோஷ்டித் தலைவரும் முதலில் ஆரம்ப பேச்சுக்களை நிகழ்த்தினார்கள். கூட்டம்

# புதுமுயற்சிக்கு இருசார்பினரும் ஆதரவு

மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் இந்திய உள்துறை மந்திரி திரு. நந்தா கூறியதாவது:-

வகுப்பு ஒற்றுமையைத் தோற்றுவிப்பதுவும் வன்முறைச் செயல்களை ஒழித்துக் கட்டுவதுமே மகாநாட்டின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இரு நாடுகளிலுமுள்ள சிறுபான்மையினருக்கும் பத்திரமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க இருசார்பினரும் பரஸ்பரம் அக்கறை கொள்ள வேண்டும். இவ்வித நல்ல சூழ்நிலை ஏற்படுவதைப் பாரதம் மனப்பூர்வமாக வரவேற்கிறது.

நேரு-லியாகத் அலிகான் ஒப்பந்தம் பயனுள்ள வழியில் அமுல் நடத்தப்பட வேண்டும்.

இருசார்பினரும் ஒருவரை ஒருவர் தூற்றிக்கொண்டிருப்பதால் எந்தவித நன்மையும் விளையாது. இதைவிடுத்து நன்மை விளையக்கூடிய வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

பாரதத்திலுள்ள சிறுபான்மையினருக்கு பாதுகாப்பளிப்பது பாரத அரசியல் சாசனத்தில் இடம்பெற்றுள்ள விஷயம். சமத்துவம் ஆட்சி உரிமை இவற்றையெல்லாம் சிறுபான்மையினருக்கு வழங்குவது பாரதநாட்டின் கொள்கை.

இரண்டு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கிழக்குப்பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளார்கள். இவர்களில் பலர் மிக்க துயரம் கொண்டுள்ளார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இருநாட்டிலுமுள்ள லட்சக்கணக்கான மக்களின் உயிர்களைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பதில் இருசார்பினரும் மிக்க அக்கறை காட்ட வேண்டியது அவசியம்.

இதற்காக இருநாட்டினரும் நல்லதொரு உடன்பாட்டுக்கு வருவது மிக்கபயனளிப்பதாக இருக்கும்.

பாகிஸ்தான் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய பாகிஸ்தான் உள்துறை மந்திரி திரு. ஹபிபுல்லாகான் பேசுகையில் பழைய புண்களைக் கிளறுவது நன்மை விளைவிக்காது என்றும் கடந்த கால விஷயங்களை அறவே மறந்து புது முயற்சியில் நல்லபடியான தீர்வு காணவே தாம் வந்திருப்பதாகவும் கூறினர்.

தாமும் தமது கோஷ்டியினரும் திறந்த மனத்துடன் வந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

### புட்டோ அபிப்பிராயம்

இந்திய-பாக் மந்திரிகளின் கூட்டம் பற்றி பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ இன்று கருத்துத் தெரிவிக்கையில், இனக்கலவரங்களை தடுக்க இக் கூட்டம் வகை செய்யுமென்று தாம் நம்புவதாயும் இரு நாடுகளிடையேயும் வகுப்பு ஒற்றுமை வளர இக்கூட்டம் வழிவகுக்க வேண்டுமென்று தாம் கோருவதாகவும் கூறினர்.

பாகிஸ்தான் இந்திய உள்துறை மந்திரிகளின் இம் மகாநாடு வியாழக்கிழமை முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கோண்டாவில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு வீடு திரும்புவார். எனது சகோதரி தனபாக்கியத்துடன் என் அந்தரங்கங்கள் பற்றிக் கதைப்பதுண்டு.

வழக்கறிஞர்: உமக்கு உமது மச்சான் சண்முகத்தை தெரியுமா?

சாட்சி: தெரியாது!

நீதிபதி: உண்மையை ஒழிக்காமல் சொல்லவும். சண்முகத்தைத் தெரியுமா?

சாட்சி: ஆம்.

குறுக்குவிசாரணையின்போது தான் பெற்ற குழந்தை சண்முகத்தினுடையதல்லவென்றும் சண்முகம் வீட்டுக்கு வருவதில்லையென்றும் சரசுவதி தெரிவித்தார்.

## அணுசக்தி நிலையம்

கெய்ரோ, ஏப். 7

ஐக்கிய அரபுக் குடியரசில் இன்னும் ஐந்து வருடகாலத்துக்குள் அணுசக்தி நிலையமொன்று அமைக்கப்படுமென ஐ. அ. கு. பிரதமர் திரு. அலி சாப்ரி இன்று அறிவித்துள்ளார்.

## கண்டனத் தினம்

டாக்கா, ஏப். 7

ஏப்ரல் மாதம் பத்தாந் திகதியை பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு எதிரான கண்டனத் தினமாக அனுசரிக்குமாறு தேசிய ஜனநாயக முன்னணியின் கிழக்குப் பாகிஸ்தான் கிளை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

காலி சம்பவம்

# விசாரணைக் கமிட்டியை பிரதமர் நியமித்தார்

கொழும்பு, செவ்வாய்

பெப்ரவரி மாதம் 6-ம் திகதி காலி துறைமுகத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்யும் பொருட்டு பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விசாரணைக் கமிட்டியொன்றை நியமித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கஜபாகு கப்பலைச் சேர்ந்த சில கடற்படையினர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 6-ம் திகதி காலி துறைமுகத்தில் ஏற்பட்ட சம்பவம் குறித்து நேரிலோ அல்லது எழுத்துமூலமோ தகவல் தெரிவிக்க விரும்புபவர்கள் தலைவர், கடற்படை சம்பவ விசாரணைக் கமிட்டி, வர்த்தக கைத்தொழில் அமைச்சு, இல: 404 புலர்ஸ்வீதி, கொழும்பு 7 என்ற விலாசத்துக்குதொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். விசாரணைக் கமிட்டி முன் சாட்சியமளிக்க பொது மக்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனக் கூறப்படுகிறது.

விசாரணைக் கமிட்டியுடன் தொடர்பு கொள்ள விரும்புவோர் இம்மாதம் 30-ம் திகதிக்கு முன் தங்களது கருத்துக்களையும் தெரிவிக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளனர்.

விசாரணைக் கமிட்டியில் திரு. பி. எச். டி' சொய்ஸா (தலைவர்), திரு. எச். ஆர். அமீத், தளபதி திரு. பி. பி. கூரே ஆகியோர் உள்ளனர்.

# 'இறந்தவரின் கால்களில் 6 சன்னங்கள் இருந்தது'

## பூநகரி கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

பூநகரி கொலை வழக்கு நேற்று பிற்பகல் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கிளிநொச்சி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் லியூக் ஜோசைப் பிள்ளை சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் திகதி பூநகரி பகுதியில் என். கணேசன் என்பவரை, ஏ சதாசிவம், அவரது மனைவி எஸ். பார்வதிப்பிள்ளை, அவரது புத்திரிகளான எஸ். பரமேஸ்வரி, எஸ். தியாகசுந்தரி ஆகிய நால்வரும் கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சி. கதிரவேலு திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். புரக்டர் கே. சோமாஸ்கந்தனின் உதவியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் சகாயம் வழக்கை நடத்தினர்.

டாக்டர் லியூக் ஜோசைப் பிள்ளை சாட்சியமளித்த போது கூறியதாவது:-

இறந்தவரை நான் பிரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கையை இங்கு சமர்ப்பிக்கிறேன். இறந்தவரின் சடலத்தில் சன்னத்தால் ஏற்பட்ட 9 காயங்கள் காணப்பட்டன. இறந்தவரின் கால்களில் இருந்து 6 சன்னங்களை கண்டெடுத்தேன். கத்திக்குத்துக் காயங்களும் காணப்பட்டன. வெளிக்காயங்கள் கத்திக்குத்தினல் ஏற்பட்டது. தலையிலிருந்த காயம் கத்தியை வீசும்போது ஏற்பட்டது மற்றக்காயங்கள் இறந்தவரை இழுத்ததால் ஏற்பட்டது. கழுத்திலிருந்து துடை வரை சன்னங்களினல் ஏற்பட்டது. எவ்வளவு தூரத்திலிருந்து காலஞ்சென்றவர் சுடப்பட்டார் என்று கூற முடியாது. ஒரு சூடுதான் சுடப்பட்டிருக்க வேண்டும். எல்லாக் காயங்களும் இறந்தவரின் உடம்பின் இடது பக்கத்தில் காணப்பட்டது. இறந்தவரின் வயிற்றில் இடியப்பமும், சிறு மீன் துண்டுகளும் காணப்பட்டன.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். சி. கதிரவேலு குறுக்கு விசாரணை செய்தபோது டாக்டர் கூறியதாவது:-

இறந்தவரின் உடலில் தடியினல் அடிபட்ட காயங்கள் காணப்படவில்லை. எல்லாக் காயங்களும், கத்தியினலும் துவக்குச் சூட்டினலும் ஏற்பட்டவை 4-ம் நம்பர் சன்னங்கள் உள்ள தோட்டா பாவிக்கப்பட்டிருக்கிறது. இறந்தவர் மதுபானம் பாவித்திருந்தார் கடைசி சாப்பாட்டிற்கு 3 மணி நேரத்தின் பின் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இம்மாதம் 20-ம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில்

# 10 லட்சம் பனை விதைகள் நாட்டப்படும்

## பனைமர அபிவிருத்தியில் விவசாயப்பகுதி ஊக்கம்

யாழ்ப்பாணம், புதன்

பயிர்ச்செய்கைக்குத் தகுதியற்று தரிசு நிலமாகக் கிடக்கக்கூடிய காணிகளிலெல்லாம் தற்போதைய பருவகாலத்தில் பனை விதைகளை நாட்ட யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் கமிட்டி நடவடிக்கை மேற்கொள்ள விருக்கிறது.

இப் பருவகாலத்தில் சுமார் 10 லட்சம் வரையான பனை விதைகளை நாட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தடை இருந்தபோதும் யாழ்ப்பாணத்தில் சென்ற 20 வருடங்களில் கட்டடங்களின் கூரை மரங்களாக உபயோகிப்பதற்கென 10 லட்சம் பனை மரங்கள் வெட்டப்பட்டன என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே காலத்தில் புதிதாக பனை விதைகள் ஒன்றுதானும் நாட்டப்பட்டிருக்கவில்லை.

எவ்வளவோ பயன்தரக்கூடிய இப் பனைமரத்தின் அபிவிருத்திக்காக நடவடிக்கை ஏதும் எடுக்காதிருப்பது பெரும் கஷ்டத்தையே ஏற்படுத்துமெனக் கருதப்படுகிறது.

மக்களுக்கு நற்பயனை அளிக்கக்கூடிய பனை மரத்தைக் கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் உற்பத்தி செய்வதால் பலவித பயன் அடையலாம் என விவசாயக் கமிட்டியினர் அபிப்பிராயம்கொண்டுள்ளனர்.

# வனவிலங்கு பாதுகாப்புசங்கம்

## யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

வனவிலங்குபாதுகாப்புச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஒன்று அண்மையில் இங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. என். ஜெயவீரா தலைமைவகித்தார். சங்கத்தின் தலைவராக வண. எஸ். கே. பங்கரும், காரியதரிசியாக திரு. ஏ. வி. விஸ்வநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பகுதி காரியாதிகாரிகளும் பல்வேறு பகுதிப் பிரதிநிதிகளும் கொண்ட கமிட்டியும் நியமிக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மாவட்டத்தின்பல பகுதிகளிலிருந்தும் எண்பதுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றினர். இப் பகுதியில் வனவிலங்குகளை விற்பனைக்காகவும், உணவுக்காகவும் கொல்லும் பழக்கம் கடந்த சில வருடங்களில் மலிந்திருப்பதாகவும், வனவிலங்குப் பாதுகாப்புச்சங்கம் நிறுவப்பட்டுள்ளது பெரிதும் வரவேற்கப்படும் எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

## அரசாங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த இது சம்பந்தப்பட்ட விரிவான அறிக்கை ஒன்றை ஒருமாதகாலத்தில் சமர்ப்பிக்குமாறு மந்திரி திறைசேரியைக் கோரியுள்ளார்.

அரசாங்கக் காரியாலயங்கள் இடம்பெறக்கூடிய பொருத்தமான கட்டடங்களை விரைவில் நிர்மானிக்கக்கூடிய வழிவகைகளையும் மேற்கொள்ளுமாறு நிதிமந்திரி தெரிவித்துள்ளார்.

அரசாங்க காரியாலயங்கள் தனிப்பட்டவர்களின் கட்டடங்களில் இருப்பதால் அரசாங்கத்துக்கு வீண் செலவு ஏற்படுவதால் இதனைத் தடுக்குமுகமாகவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# 'க்ஷயரோகத்தைத் தடுக்க உதவுக'

## கவர்னர் ஜெனரல், பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு, செவ்

க்ஷயரோகத் தடுப்பு முயற்சியில் தேசிய க்ஷயரோக தடுப்புச் சங்கமும் இதர ஏஜன்ஸிகளும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென மகாதேசாதிபதியும் பிரதமரும் இன்று கூட்டாக விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார தினமான இன்றைய தினத்தை இலங்கை தேசீய க்ஷயரோக தடுப்புச் சங்கம் க்ஷயரோக தடுப்பு தினமாக கொண்டாடியது. இதையொட்டியே மகாதேசாதிபதியும் பிரதமரும் மேற்கண்ட வேண்டுகோள் விடுத்தனர்.

# பிரதிநிதிகள் வெளிநடப்பு

ஜெனிவா, ஏப். 7

ஜெனிவா உலக வர்த்தக மகாநாட்டில் இன்று போர்த்துக்கல் பிரதிநிதி உரை நிகழ்த்த எழுந்தபோது மகாநாட்டில் கலந்துகொண்ட 80 பிரதிநிதிகள் வெளிநடப்புச்செய்தனர்.

இம் மகாநாட்டில் எல்லாமாக 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.